**செப்டம்பர் - 30**

**"கிறிஸ்துவினுடைய அன்பு எங்களை நெருக்கி ஏவுகிறது."**

**- 2கொரி 5 : 14**

அன்பைத்தானே விவரிப்பது முடியாத காரியமாகத் தோன்றுகிறது. நாம் செய்யக் கூடிய மிகச் சிறந்த காரியம் அதன் நடத்தையை விவரிப்பதாகும். அன்பு தேவனுடையதாயிருக்கிறது. இருதயத்திலும், நாவிலும் கையின் கிரியைகளிலும், எண்ணங்களிலும், தேவனைப் போலொந்த்ததாய் இருக்கிறது. எல்லா மானிட குணங்களையும் மேற்பார்வையிட்டுக் கொண்டும், அவைகளை முற்றிலுமாக அடக்கியாள நாடிக் கொண்டிருக்கிறது. இவ்விதமான குணங்களோடு கூடிய ஒரு அன்பை உடையவர்களோ அதை உயர்வாக மதிக்கக் கூடியவர்களாக இருக்கிறார்கள். ஆனால் மற்றபடி அதை விளக்கக் கூடாதவர்களாயிருக்கிறார்கள். கிறிஸ்துவின் சீஷர்களாக அல்லது மாணவராக நாம் அவருடைய பள்ளியில் படிக்கிறோம். நமது அழைப்பின் அதனுடைய எல்லா பல்வேறு அம்சங்களிலும், பிரிவுகளிலும் பந்தயப் பொருளின் இலக்கை நாம் அடைய வேண்டுமானால் நாளுக்கு நாள் அவர் நமக்குப் போதித்துக் கொண்டிருக்கிற பெரிய படிப்பினையும் நாம் பூரணமாக படிக்க வேண்டிய அந்தப் படிப்பினையும், அன்பின் படிப்பினையேயாகும். அது நமது அன்றாட ஜீவியத்தின் எல்லா வார்த்தைகளையும் எண்ணங்களையும் செயல்களையும் பற்றிக் கொண்டு இவைகளின் ஊடே உள்ள சம்பந்தத்தைக் காண்பிக்கிறது. கவி சொல்லியிருப்பது போல,

"ஒவ்வொரு அழகான நிறமும் ஒளியாயிருக்கிறாது போல
ஒவ்வொரு குணசீலமும் அன்பாயிருக்கிறது."

**- Z '03, 55, 58 (R 3150).**

கிறிஸ்துவினுடைய அன்பு; இதனால் நாம் மூன்று காரியங்களை அறியலாம். 1. நமது கர்த்தர் தன்னுடைய இருதயத்திலே வைத்திருக்கும் அன்பு 2. அவருக்காக நம்முடைய இருதயங்களில் நாம் வைத்திருக்கிற அன்பு 3. அவர் தன்னுடைய இருதயத்தில் வைத்திருக்கிற அன்பைப்போலொத்த நம்முடைய இருதயங்களில் நாம் வைத்திருக்கிற அன்பு. பிந்தின இரண்டு அர்த்தங்களும் இந்த வாக்கியத்திற்குப் பொருத்தமாயிருக்கின்றன. கிறிஸ்துவுக்காகவுள்ள நம்முடைய அன்பு நம்மை ஊழியம் செய்யவும் பாடு அனுபவிக்கவும் ஊக்கமளிக்கிறது. அவரில் அன்பு கொண்டு நாம் அவருடைய போதனைகளைப் பேணி வைத்திருக்கிறோம். முழுமையான அர்த்தத்திலும் தேவனுக்காகவும், இயேசுவுக்காகவும், சகோதருக்காகவும் உலகின் மனுமக்களுக்காகவும், நமது விரோதிகளுக்காகவும் உள்ள கிறிஸ்துவைப் போலொத்த அன்பு நம்முடைய நடத்தையில் நம்மைத் தூண்டுகிறது. இப்படிப்பட்ட அன்பு பிரதானமாக ஆளுகைச் செய்கிற அந்த இருதயம் உண்மையாகவே அழகாக இருக்கிறது. உண்மையாகவே செழிப்பான சிரேஷ்டமான ஆசீர்வாதங்களை அது பெற்று தேவனுடைய மகிமைக்கென்று கொடுக்கிறது.

**- P '26, 126.**

**ஒத்து வாக்கியங்கள் :-**

யோவா 14:15,21,23,28; 15:9; ரோம 5:5; 8:28; 1கொரி 8:3; கலா 5:6,22; எபே 3:17-19; பிலி 1:9; கொலோ 3:14; 2தெச 3:5; எபி 6:10; 1யோவா 2:5,15; 3:16-18; 4:12,16-21; 5:1-3; 2யோவா 6.

**கோபுர வாசிப்பு** : Z '11, 182 (R 4836).

**வினாக்கள்** : இந்த வாரத்தில் கிறிஸ்துவின் மேலுள்ள அன்பானது என்ன செய்ய என்னைத் தூண்டியது? எப்படி? பலன்கள் என்ன?